**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**மேட்டூர்,**
**தேதி: 05.03.2026**
**OS. No. 09/2021**
**வழக்கு சாட்சி DW.1–மாதையன், த/பெ.பொன்னுசாமி**

(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து 8 முதல் 10 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் )

<u>8 முதல் 10 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

1ம் வாதி என் மருமகள் ஆவார், 2, 3 வாதிகள் என் பேத்திகள் ஆவார்கள். அவர்கள் பாகபிரிவினை கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். 2ம் பிரதிவாதி என் மனைவி ஆவார், 3,4 பிரதிவாதிகள் என் மகன்கள் ஆவார்கள். 5 முதல் 7 பிரதிவாதிகள் எங்கள் நிலத்தை கிரையம் பெற்ற கிரையதாரர்கள் ஆவார்கள். என் மற்றொரு மகன் மகேந்திரன் இறந்துவிட்டார். அவர்தான் 1ம் வாதியின் கணவர் ஆவார். எங்களுக்குள் இருக்கும் பிரச்சனை தொடர்பாகத்தான் இந்தவ ழக்கு என்றும், 8 முதல் 10 பிரதிவாதிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரிதான். 8ம் பிரதிவாதியான சார்பதிவாளர் இருதரப்பினர்களும் நேரில் ஆஜராகி மூல ஆவணங்களை சரிபார்த்து முறையாக இருக்கும் பட்சத்திலும், அதற்கான பதிவு கட்டணம் செலுத்தும் பட்சத்திலும் சட்டவிதிமுறைகளுக்கு உட்பட்டு பதிவு மேற்கொள்வார் என்றால் சரிதான். அதேபோல் இந்த வழக்கு பொறுத்தமட்டிலும் சட்டவிதிமுறைகளுக்குட்பட்டு தான் அவர்கள் செயல்படுவார்கள் என்றால் சரிதான்.

ஒம்/–திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.